<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 108/2024 | சாட்சியம் | : | **WW1** |
| **Name** | : | திரு.**விஜயகுமார்** | | | |
| **Date** | : | **14.08.2026** | | | |
| **Time** | : | **11.06 a.m to 11.22 a.m** | | | |

<u>தொ.சா.**1.**திரு. விஜயகுமார் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

எனக்கு ஆங்கிலம் ஓரளவு எழுத படிக்க தெரியும். என்னுடைய மனுவிலும் சாட்சியத்திலும் 31.05.2024 அன்று பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அதனை ரத்து செய்ய வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளேன் என்றால் ஆமாம். தொழிற்சங்கமும் நிர்வாகமும் பணி நிலை சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தினார்கள் என்றால் தொழிலாளர்களை கலந்து ஆலோசிக்காமல் ஏற்படுத்தினார்கள். ஒப்பந்ததில் உள்ள விவரங்கள் பற்றி தெரியாது. 02.01.2023 அன்று பணி மாறுதல் உத்தரவு எனக்கு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். ஆனால் அதனை படித்து பார்த்துவிட்டு அதில் சொல்லியுள்ளது போன்று நாங்கள் ஊழியர்கள் அல்ல மாறாக தொழிலாளர்கள் என்று வாங்க மறுப்பு தெரிவித்த போது நிர்வாகம் அதில் கையெழுத்து போட்டு வாங்கிக் கொண்டால் தான் பணியில் தொடர முடியும் என சொன்னதன் காரணமாக தொழிலாளர்கள் கையெழுத்து போட்டு வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டபடும் உத்தரவு தான் எனக்கு வழங்கப்பட்டது என்றால் ஆமாம் அது

நி.சா.ஆ.1. 07.02.2023 அன்று 2வது பணி மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டது என்றால் ஆமாம் அது நி.சா.ஆ.2. 17.09.2024 அன்று செட்டில்மெண்ட் தொகை குறிப்பிட்டு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். ஆனால் அதில் சொல்லி இருந்த கம்பெனியில் நான் வேலை பார்க்கவில்லை. நான் வேலை செய்த கம்பெனியில் இருந்து காசோலை எதுவும் வழங்கப்படவில்லை. எனக்கு வந்த காசோலையை நான் அந்த கம்பெனிக்கு திருப்பி அனுப்பிவிட்டேன். திருப்பப்பட்ட காசோலையுடன் திருப்பபட்ட காரணத்துடன் கூடிய கடிதமும் அதற்கான ஒப்புகை அட்டையும் இணைத்து அனுப்பப்பட்டது. பணி மாறுதலை எதிர்த்து வழக்கு எதுவும் போட்டேனா என்றால் இல்லை. என் பணி நியமன ஆணையில் பணி மாறுதலுக்கான ஷரத்துக்களும் கண்டுள்ளன என்றால் ஆமாம். ஆனால் அவர்கள் என்னை வேறு கம்பெனியில் சர்வீஸ் செண்டருக்கு பணி மாறுதல் செய்தார்கள். என்னை போன்று சுமார் 30 பேரை பணி மாறுதல் செய்தார்கள். பணியிட மாறுதல் உத்தரவை எதிர்த்து இந்த வழக்கு போட உரிமை இல்லை என்றால் தவறு. தவறான வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் காரணத்தினால் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தொடர்ந்து வேறு இடத்தில் சம்பளத்திற்கு வேலை செய்து வருகிறேன் என்றால் இல்லை.

மறு விசாரணை: இல்லை.

Typed to my dictation, read over to, interpreted to the witness and acknowledged by her/him to be correct.

S SUJATHA
Digitally signed by S SUJATHA
Date: 2026.08.14 13:10:48 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:14.08.2026.